# திராவிடத்தால் வாழ்கிறோம்

966

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

128

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த பண்ருட்டி மிசா அ.மணி அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# பண்ருட்டி மிசா அ.மணி; ‘நிமிர்ந்து நின்ற வேங்கைப்புலி’

2020-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இணையதளம் வழியாக, கடலூர் கிழக்கு, மேற்கு மாவட்டப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார் கழகத் தலைவர். தனது உரையில், கடலூர் மாவட்டத்துக்கு, கழக ஆட்சியில் செயல்படுத்திய திட்டங்களைப் பட்டியலிட்டதுடன், அன்றைய தென்னாற்காடு மாவட்டம், இன்றைய கடலூர் மாவட்டக் கழகத்தின் தூண்களாக இருந்து தொண்டாற்றிய முன்னோடிகள் பலரையும் நினைவுகூர்ந்தார். “எண்ணற்ற தியாகிகளின் ரத்தத்தால், வியர்வையால் இன்று கழகம் கம்பீரமாக நிற்கிறது’’ என அவர் ஆற்றிய உணர்வுபூர்வமான உரையில், “எவருக்கும் பயப்படாத பண்ருட்டி மணி’’ என அவர் போற்றிய முன்னோடி பண்ருட்டி மிசா அ.மணி. முத்தமிழறிஞர் கலைஞரின் அன்பு உடன்பிறப்பு. “நிமிர்ந்து நின்றால் வேங்கைப்புலி, சிரித்தால் ஒரு செழிப்பு, பேசினால் ஒரு நேசம், பாசம்’’ என முத்தமிழறிஞரால் புகழப்பட்ட முன்னோடி.

அன்றைய தென்னாற்காடு மாவட்டம், பண்ருட்டியில் 1929-ஆம் ஆண்டு பிறந்தவர். பெற்றோர் அபிமன்யு - கனகம்மாள். தி.மு. கழக அரசியல் தீயாகப் பரவிய மாவட்டங்களில் அன்றைய தென்னாற்காடு பகுதி முக்கியமானது. 1952-ஆம் ஆண்டுத் தேர்தலில், கழகத்தின் ஆதரவு பெற்ற வேட்பாளராக நின்ற, கழக முன்னோடி ஆ.கோவிந்தசாமி அவர்கள், நின்று வென்ற வளவனூர் தொகுதியின் தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்ற இளைஞர்களில் ஒருவராகக் கழக முன்னோடிகள் பலரோடும் இணைந்து பயணித்தவர். நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி, முட்டம் எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி, கடலூர் இளம்வழுதி, விருத்தாசலம் செல்வராசு என முன்னோடிகள் பலரோடும் இணைந்து செயல்பட்டவர். பண்ருட்டி நகரக் கழகச் செயலாளராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

### சிறைக்கு அஞ்சா வாழ்க்கை

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். 27 முறைக்கு மேல் சிறை சென்று வந்த, சிறைக்கு அஞ்சா சிங்கம் என்கிறது தலைமைக் கழகத்தின் குறிப்பு. கருப்புக்கொடி போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் அனைத்திலும் சிறை சென்றுள்ளார். போராட்டக்குணமும், கழக உறுதியும்தான், 1966-ஆம் ஆண்டில் பண்ருட்டி நகரக் கழகச் செயலாளராக அவருக்குப் பொறுப்பினைக் கொண்டுவந்தது.


சிறைக் கொடுமைகளின் உச்சமாக, மிசா நெருக்கடி காலத்தில் கைதுசெய்யப்பட்ட அவர் ஓராண்டுக் காலம், இன்றைய கழகத் தலைவர் அவர்களுடன் சக சிறைவாசியாக சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டவர். அருகில் இருந்த கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்படாமல், சென்னை மத்திய சிறைக்குக் கொண்டுவரப்பட்டு, கொடும் சித்ரவதைகளை அனுபவித்தவர்.

### நகரக் கழகச் செயலாளர்

1966-ஆம் ஆண்டு, அவர் நகரச் செயலாளராகப் பொறுப்புக்கு வந்த அதே காலகட்டத்தில், மூன்றாம் நிலை நகராட்சியாக உருவானது பண்ருட்டி. நகராட்சியான பின்னர் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிபெற்று, 1969-ஆம் ஆண்டு முதல் நகர்மன்றத் தலைவராகப் பொறுப்பேற்றார் மணி.

1976-ஆம் ஆண்டு வரை நகர்மன்றத் தலைவராகப் பொறுப்பில் இருந்தபோதுதான், 1975-ஆம் ஆண்டில் பண்ருட்டி நகரம், இரண்டாம் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது.

10 ஆண்டுகள் தேர்தல் நடைபெறாத நிலையில், 1986-ஆம் ஆண்டு நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில், மீண்டும் மணி அவர்களே வெற்றிபெற்று நகர்மன்றத் தலைவரானார். 1986-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை அப்பொறுப்பில் இருந்தார். அவர் பொறுப்பில் இருந்த காலகட்டத்தில், 1989-ஆம் ஆண்டு, பண்ருட்டி முதல்நிலை நகராட்சியானது. அவரது நிர்வாகமே பண்ருட்டி நகராட்சியின் அடித்தளமாக இருந்தது.



ஓவியம் : ரவி பேலட்

> **நகர் மன்றத் தலைவராக இருந்தபோது, பண்ருட்டி நகரத்தின் சந்திப்புப் பகுதியில், கலைஞரின் பொன்விழா கொண்டாட்ட வளைவினை அமைத்தார்.**

### எவருக்கும் அஞ்சாத மணி

கழகம் ஆட்சியில் இருந்தபோது, நகரச் செயலாளராக, நகர்மன்றத் தலைவராக முதல்வர் கலைஞரிடம், பண்ருட்டி நகராட்சிக்கும் பல கோரிக்கைகளை முன்வைத்து, செயல்படுத்தியிருக்கிறார். பண்ருட்டி நகரத்தின் குடிநீர்த் தேவைகளைத் தீர்க்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அனைத்தும் அவர் இருக்கும்போது கொண்டுவரப்பட்டவைதான். அப்போதே, நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு ஜெனரேட்டர் வசதிகளை உருவாக்கியவர்.

பிற்படுத்தப்பட்ட வன்னிய மக்களின் இட ஒதுக்கீட்டுக்கான போராட்டங்கள் வலுப்பெற்று வந்த 1987 காலகட்டங்களில், விழுப்புரம், பண்ருட்டி, கடலூர் பகுதிகளில் பிற்படுத்தப்பட்ட மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்திய புதிய அரசியல் சக்திகளுக்கு அஞ்சாமல், கழக அரசியலை உயர்த்திப்பிடித்தவர். கழக நிகழ்ச்சிகளுக்கான சுவரொட்டிகளில் தவறாமல், அவர் படம் இடம்பெறும். 1987-ஆம் ஆண்டு வன்னியர் இட ஒதுக்கீடு போராட்டம், செப்டம்பர் மாதத்தில் நடந்தபோது, கழகத்தினருக்குப் பாதுகாப்பு அரணாக நின்றவர் மிசா மணி. அந்தப் பண்புதான் ‘எவருக்கும் அஞ்சாத மணி’ என கலைஞர் சொல்லும் அளவுக்கு பெயரைக் கொண்டுவந்தது.

### சட்டமன்ற உறுப்பினர்

நகர்மன்றத் தலைவராக நீண்ட கால அனுபவம் கொண்ட அவருக்கு, சட்டமன்றத் தேர்தலில் நிற்பதற்கான வாய்ப்பினை அளித்தார், தலைவர் கலைஞர். 1991-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பண்ருட்டி தொகுதியில் போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் வெற்றிபெறாத நிலையில், மீண்டும் 1996-ஆம் ஆண்டில், நெல்லிக்குப்பம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பை அளித்தார் கலைஞர். 54 சதவிகித வாக்குகளுடன் வெற்றிபெற்ற மணி அவர்கள், கலைஞர் முதலமைச்சரான அவையில் சட்டமன்ற உறுப்பினராக வந்து அமர்ந்தார்.

கழகத்தின் மீதும் கலைஞர் மீதும் அளவிலா பற்று கொண்டவர். அவர் நகர் மன்றத் தலைவராக இருந்தபோது, பண்ருட்டி நகரத்தின் சந்திப்புப் பகுதியில், கலைஞரின் பொன்விழா கொண்டாட்ட வளைவினை அமைத்தார். அந்த வளைவு, எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் ‘பெரியார் நூற்றாண்டு வளைவு’ என பெயர் மாற்றப்பட்டது.

1993-ஆம் ஆண்டு, கழகத்தில் இருந்து பிரிந்துசென்ற செஞ்சி ராமச்சந்திரன், மாவட்டக் கழக நிர்வாகிகள் பலரையும் தன்னோடு அழைத்துச் சென்றபோது, கழகத்தின் நம்பிக்கையாக, கலைஞரின் நம்பிக்கையாக மாவட்டக் கழகத்தை உறுதியுடன் கட்டிக்காத்த தளகர்த்தர்களில் ஒருவராக நின்றார். நகரச் செயலாளராக நீண்டகால அரசியல் பயணம் மேற்கொண்டவர், 1999-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் தேதி எதிர்பாராத விதமாக இயற்கை எய்தினார். இன்றைய கழகத் தலைவர் அவர்கள், மணி அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு அவரது நினைவுகளைப் போற்றினார்.

“அந்த உருவம் என் கண்ணை விட்டு என்றும் மறையாது” என இரங்கல் கடிதம் எழுதினார் கலைஞர். 25 ஆண்டுகளைக் கடந்தும், பண்ருட்டி நகரக் கழகம் அவர் நினைவுகளைப் போற்றிக்கொண்டிருக்கிறது.

**...துடிக்கும்**

## பத்திரிகையாளரை மிரட்டும் அ.தி.மு.க.!

அ.தி.மு.க.வுக்குள் புதிய புதிய அணிகள் உருவாகி, அவர்கள் அனைவரும் டெல்லி சென்று பா.ஜ.க. தலைவர்களைச் சந்திப்பதும், பா.ஜ.க. தலைவர்கள் தமிழ்நாடு வந்தால், அ.தி.மு.க பஞ்சாயத்துகளைத் தீர்ப்பதுமாகத் தினம் தினம், தங்களின் சுயமரியாதையை பா.ஜ.க. தலைவர்களிடம் அ.தி.மு.க.வினர் அடகு வைத்த கதைகளை தமிழ்நாடு அறியும். அந்த வரிசையில், புதிய அடையாளம் டெல்லியில் எடப்பாடியின் முகமூடிப் பயணம்.

“ஆட்சி அதிகாரத்தைவிட தன்மானமே முக்கியம்” என்று கூறி வந்த எடப்பாடி பழனிசாமி, சில தினங்களுக்கு முன், டெல்லி சென்று அமித்ஷாவைச் சந்தித்துவிட்டுத் திரும்பி வரும்போது, முகத்தைக் கைக்குட்டையால் மூடிக்கொண்டு வந்த வீடியோ காட்சிகள், அனைத்து ஊடகங்களிலும் வெளியானது.

இந்நிலையில், அந்த வீடியோ காட்சியைப் பகிர்ந்ததற்காக, டெல்லியில் உள்ள ஊடகவியலாளர் நிரஞ்சன்குமாருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது, அ.தி.மு.க. இணையதளப் பிரிவு. “அந்தக் காணொலி உண்மை இல்லை என்றால், அதற்கு மறுப்போ அல்லது விளக்கமோ தரலாம். ஆனால், பகிரங்கமாக மிரட்டல் விடுக்கும் வகையில், அனுப்பப்பட்டுள்ள இந்த நோட்டீஸ், கருத்துச் சுதந்திரத்தைக் காலில் போட்டு மிதிக்கும் செயல்” என்று தமிழ்நாடு டிஜிட்டல் பத்திரிகையாளர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

“விவசாயிகள் போராட்டம், 2024 நாடாளுமன்றத் தேர்தல் களம், உச்ச நீதிமன்ற நிகழ்வுகள், நாடாளுமன்ற நடவடிக்கைகள் எனப் பல்வேறு முக்கிய செய்திகளை, டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு வழங்கியவர், பத்திரிகையாளர் நிரஞ்சன். தற்போது, சுதந்திர பத்திரிகையாளராகச் செயல்படும் அவரை, மோசமான வார்த்தைகளால் அ.தி.மு.க. தாக்கியிருக்கிறது. உங்கள் அனைவரையும் பெயரிட்டு, அவமானப்படுத்தவேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அனைத்து சுதந்திர பத்திரிகையாளர்களையும் அ.தி.மு.க. மிரட்டுகிறது. பாசிசப் போக்கை வெளிப்படுத்தும் அறிக்கையை, அ.தி.மு.க. திரும்பப் பெற வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளனர்.

பா.ஜ.க.விடம் பம்முவதை நிறுத்தினால், அ.தி.மு.க. இப்படி பத்திரிகையாளர்மீது பாயத் தேவையில்லை என்றும் சமூக வலைதளங்களில் விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. கருத்துச் சுதந்திரத்துக்குத் துணை நிற்போம்.

## ஃப்ளாஷ்பேக்



ச.தியாகு



### பேரறிஞர் அண்ணாவுடன் வட்டச் செயலாளராக நான்!

1961-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் மதுரைக்கு வருகைதந்தார். அப்போது, அவரது நண்பர் மருத்துவர் அருணாசலம் அவர்களின் இல்லமான முத்தகத்தில்தான் தங்கினார். அன்றைய கோரிப்பாளையம் வட்டச் செயலாளரான நான் அவரைச் சந்தித்தேன். அப்போது, தியாகராசன் என்ற என் பெயரை ‘தியாகு’ என்றழைத்தார் அண்ணா. அவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. பின்னாட்களில் அரசுப் பணியில் சேர்ந்துவிட்டாலும், ஓய்வுபெற்ற பிறகு, 83 வயதிலும் அதே உணர்வுடன் கழகப் பணியாற்றிவருகிறேன்.

**– ச.தியாகு எம்.ஏ.,**
**சங்கர் மாளிகை,**
**ஆனையூர், மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நன்கொடை திரட்டிய நடிப்பிசைப் புலவர்!

1956-ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற தி.மு.க. இரண்டாவது மாநில மாநாட்டுக்கு நிதி திரட்டுவதற்காக, 1955-ஆம் ஆண்டு டிசம்பரில் சென்னையில், கே.ஆர். இராமசாமி இசையரங்கு ஒன்றை நடத்தினார். இசைக்கலைஞர்கள் தஞ்சை கோவிந்தன், தஞ்சை டி.பி.நாகராசன், மன்னார்குடி ஆறுமுகம் ஆகியோர் பங்கேற்ற இசை நிகழ்ச்சி களைகட்டியது. அந்த நிகழ்ச்சியில்தான் கே.ஆர்.இராமசாமிக்கு ‘நடிப்பிசைப் புலவர்’ என்ற பட்டத்தை நாவலர் நெடுஞ்செழியன் வழங்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131